## கோரிக்கை மனு அளித்த அன்றே நிறைவேற்றம்

# சிறுமிக்கு செவித்திறன் கருவி பொருத்த உடனடி நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறுமி – தந்தை நெகிழ்ச்சி மிகு நன்றி!





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் காலை (11.2.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களுக்கு நேரில் சென்று மரியாதை செலுத்தினார். அப்போது திரிசூலம் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் ஆறாம் வகுப்பு பயிலும் தனது மகளுக்கு செவித்திறன் குறைபாடு உள்ளதாகவும், அக்குறைபாட்டினை சரிசெய்திட செவித்திறன் கருவி பொருத்த உதவி செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தார். அவரது கோரிக்கையை உடனடியாக பரிசீலித்து அச்சிறுமிக்கு செவித்திறன் கருவி பொருத்திட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். மனு அளித்த அன்றைய தினம் மாலையே அச்சிறுமிக்கு செவித்திறன் கருவி பொருத்தப்பட்டது. தனது கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு அச்சிறுமியும் அச்சிறுமியின் தந்தையும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

சென்னை, பிப். 13–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் காலை (11.2.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களுக்கு நேரில் சென்று மரியாதை செலுத்தினார்.

அப்போது அங்கு கூடியிருந்த பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அதில் திரிசூலம் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் ஆறாம் வகுப்பு பயிலும் தனது மகளுக்கு செவித்திறன் குறைபாடு உள்ளதாகவும், அக்குறைபாட்டினை சரி செய்திட செவித்திறன் கருவி பொருத்த உதவி செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தார். அவரது கோரிக்கையை உடனடியாக பரிசீலித்து அச்சிறுமிக்கு செவித்திறன் கருவி பொருத்திட முதலமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி மனு அளித்த அன்றைய தினம் மாலையே அச்சிறுமிக்கு செவித்திறன் கருவி பொருத்தப்பட்டது. தனது கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு அச்சிறுமியின் தந்தை சுரேஷ் தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டதோடு, தற்போது தனது மகளுக்கு நன்றாக காது கேட்பதாகவும், இது குறித்து தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் முதலமைச்சர் அவர்களுக்கு நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மேலும், அச்சிறுமியும் தான் நன்றாக படித்து நல்ல மதிப்பெண் எடுப்பதற்கு இக்கருவி பயனுள்ளதாக இருக்கும் என்றும், இக்கருவியை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2025) பெருநகர சென்னை மாநகராட்சி நுங்கம்பாக்கம் காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு புதிதாக பெயர் சூட்டப்பட்ட "எஸ்.பி. பாலசுப்ரமணியம் சாலை"யின் பெயர் பலகையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன்குமார், எஸ்.பி. பாலசுப்ரமணியம் அவர்களின் குடும்பத்தினர் திருமதி. எஸ்.பி.பி. சாவித்திரி (மனைவி). எஸ்.பி.பி.சரண், (மகன்), திருமதி. எஸ்.பி.பி.பல்லவி (மகள்), திருமதி. எஸ்.பி.சைலஜா (சகோதரி) மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

## நுங்கம்பாக்கம் – காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு

# 'எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை' என பெயர் சூட்டல்!

## பெயர்ப் பலகையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப். 13–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.2.2025) தேனாம் பேட்டை மண்டலம், நுங்கம்பாக்கம் காம்தார் நகர், முதன்மை சாலைக்கு புதிதாகப் பெயர் சூட்டப்பட்ட "எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை" யின் பெயர்ப் பலகையை திறந்து வைத்தார்.**

திரை இசைப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்கள் பல்வேறு மொழிகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, தன்னுடைய இனிய குரலால் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இசை மழை பொழிந்ததோடு, பல படங்களுக்கு இசையமைத்தும், திரைப்படங்களில் நடித்தும், பல்துறை வித்தகராக தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் பல்வேறு மொழிகளில் புகழ்பெற்ற பாடகராக திகழ்ந்தார். இவர் ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ, பத்மவிபூஷன் விருதுகளைப் பெற்றுள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பிற்குரியவரான அவர், கடந்த 25.9.2020 அன்று நம்மை விட்டுப் பிரிந்தார்.

காலம் அவரைப் பிரித்தாலும், நம் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பெற்றவர் எனக் குறிப்பிட்டு திரு. எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்கள் தமிழ்த் திரையுலகிற்கு ஆற்றிய சேவையைப் போற்றும் வகையிலும், அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும், அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு "எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை" எனப் பெயரிடப்படும் என்று மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம் பேட்டை மண்டலம், நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு புதிதாகப் பெயர் சூட்டப்பட்ட "எஸ்.பி. பாலசுப்பிரமணியம் சாலை" யின் பெயர்ப்பலகையினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

தொடர்ந்து திரையிசைப் பாடகர் மறைந்த எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே. ஜெ.பிரவீன் குமார், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்களின் குடும்பத்தினர் எஸ்.பி.பி.சாவித்திரி (மனைவி), எஸ்.பி.பி.சரண் (மகன்), எஸ்.பி.பி.பல்லவி (மகள்), எஸ்.பி. சைலஜா (சகோதரி) ஆகியோர் உள்பட குடும்பத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## டி.பி.எம்.மைதீன்கான் – மு.அப்துல் வகாப் – சுப்பிரமணியன் – ராமகிருஷ்ணன் பங்கேற்பு!

# நெல்லையில் பொருநை புத்தகத் திருவிழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைத்தார்!

நெல்லை, பிப்.13-

8 வது பொருநை புத்தகத் திருவிழாவில் கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற கழகக் குழு தலைவர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று பண்பாட்டு ஆய்வாளர் பேராசிரியர் தொ.பரமசிவன் 75 நினைவரங்கத்தினை துவக்கி வைத்து "பண்பாட்டு அசைவுகள் "என்னும் தலைப்பில் பேசினார். முன்னதாக நெல்லை மாவட்ட பள்ளி மாணவர், மாணவியர்களுக்கு தனது சொந்த நிதியில் பல்வேறு தலைப்பில் கொண்ட 1000 ம் நூல்களை நெல்லை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா. சுகுமாரிடம் வழங்கினார்.

நெல்லை மாநகராட்சி வர்த்தக மையத்தில் 8 வது பொருநை புத்தக திருவிழா 31.01.2025 தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

9 வது நாள் நிகழ்ச்சி நெல்லை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா. சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்றக் குழு தலைவர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று பண்பாட்டு ஆய்வாளர் பேராசிரியர் தொ. பரமசிவன் 75 நினைவரங்கத்தினை துவக்கி வைத்து "பண்பாட்டு அசைவுகள்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக புத்தகத் திருவிழாவிற்கு வருகை புரிந்த பொதுமக்கள் மாணவ, மாணவிகளுடன் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துரையாடி மகிழ்ந்தார்.விழா மேடையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் நெல்லை மாவட்ட பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தனது சொந்த நிதியில் இருந்து பல்வேறு தலைப்பில் கொண்ட 1000 ம் நூல்களை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமாரிடம் வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், மாநகர செயலாளர் சுப்பிரமணியன், நெல்லை மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், நெல்லை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல், துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன், முன்னாள் மேயர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன் உள்பட மாணவ, மாணவியர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்த புத்தக திருவிழாவில், மொத்தம் 127 புத்தக அரங்குகளும், பழங்காலப் பொருட்களின் கண்காட்சி, அறிவியல் தொழில்நுட்ப கண்காட்சி, செயற்கை நுண்ணறிவு கண்காட்சி, கலை இலக்கியப் போட்டிகள் பாரம்பரிய உணவகங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு அரங்கங்களும், பத்திரிக்கையாளர்களின் புகைப்படக் கண்காட்சி அரங்கம் போன்ற அரங்குகள் அமைக்கப் பட்டுள்ளது. சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு அரசு 86 ஆயிரம் குடும்பங்களுக்கு

# வீட்டு மனைப் பட்டா வழங்குவதை இந்திய கம்யூனிஸ்ட் வரவேற்கிறது!

## மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, பிப். 13-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தமிழ்நாடு அரசு 86 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது என மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் தலைநகர் சென்னை சுற்று வட்டாரத்திலும், மதுரை, நெல்லை மாநகராட்சிகள் உள்ளிட்ட நகராட்சிகளிலும், மாவட்டத் தலைநகர் பகுதிகளிலும் ஆட்சேபம் இல்லாத நிலங்களில் வசித்து வரும் 86 ஆயிரம் குடும்பங்களுக்கு, அடுத்த ஆறு மாதங்களில் வீட்டு மனைப்பட்டா வழங்குவது என 10.02.2025 அன்று முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற, தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

தமிழ்நாடு முழுவதும் பல லட்சம் குடும்பங்கள் ஆட்சேபகரமான நிலங்களில் காலம், காலமாக வீடு கட்டி வசித்து வருகின்றன. இவைகளில் நீர்பிடிப்பு அல்லது நீர் வழி போன்ற இன்றியமையாத் தேவை என கண்டறியப்படும் இடங்களில் வசித்து வருபவர்களை வெளியேற்றி, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என நீதிமன்றங்கள் உத்தரவிட்டு வருகின்றன. இந்த நீதிமன்றத் தீர்ப்புகளை அமலாக்கும் போது, குடியிருந்து வருபவர்களுக்கு மாற்று இடம் வழங்கி, வீடு கட்டி தருவதை உறுதி செய்து, ஆக்கிரமிப்புகள் அகற்ற வேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

மேலும், நீண்ட பல பத்தாண்டுகளுக்கு முன்னர், காலனி ஆட்சி நிர்வாகத்தால் ஆட்சேபனைக்குரிய இனங்கள் என ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களின் தற்போதைய நிலை குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

குறிப்பாக வாரிப் புறம்போக்கு என்பது கமலை அல்ல. கவலை இறைப்புப் பாசனத்துக்கு அத்தியாவசியமாகும். ஆனால், இன்று அனைத்தும் மின்மயமாகி விட்ட நிலையில், கமலை, கவலை இறைப்பு முறை முற்றிலுமாக வழக்கொழிந்து விட்டது. இது போல ஆட்சேபகரமான நிலங்களில் பலவகை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவைகள் தொடர்பாக ஆய்வு செய்து, மாநில, மாவட்ட அளவில் ஆய்வுக் குழுக்களை அமைத்து, ஆட்சேபகரமான நிலப்பகுதிகளை மறு ஆய்வு செய்து, அதன் தற்போது தன்மையை உறுதி செய்து, அந்த நிலத்தை தக்க வகை மாற்றம் செய்து, அந்த நிலத்தில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வழிவகை செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.



சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று முன்தினம் (11.02.2025) பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான வானவில் மன்ற போட்டிகள் மற்றும் அறிவியல் கண்காட்சியினை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் மா. ஆர்த்தி, கூடுதல் இயக்குநர் திருமதி எஸ். உமா, நாட்டு நல பணி திட்ட இணை இயக்குநர் திருமதி கா. சுசிகலா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி மாநகரம் போல்பேட்டை பகுதிக்கு உட்பட்ட 1,13,14 ஆகிய வார்டுகளுக்கான பாக முகவர்கள் கூட்டம் கீதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், 20வது வார்டுக்கான பாக முகவர்கள் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்திலும், 21 மற்றும் 11வது வார்டுகளுக்கான பாக முகவர்கள் கூட்டம் கலைஞர் அரங்கிலும் நடைபெற்றது. இக்கூட்டங்களில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான திருமதி பெ.கீதா ஜீவன் கலந்து கொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் மற்றும் எதிர்கால செயல் திட்டங்கள் குறித்து உரையாற்றினார். உடன் தொகுதி பார்வையாளர் இன்பா ஏ.என். ரகு, மாநகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர். ஆனந்தசேகரன், பகுதிச் செயலாளர் ஜெயக்குமார், வட்டச் செயலாளர்கள் ரவீந்திரன், தெய்வேந்திரன், ராஜாமணி, முனியசாமி, கனகராஜ், காளிதுரை, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஜான்சிராணி, திருமதி. ஜாக்குலின் ஜெயா, மாவட்டப் பிரதிநிதிகள் நாராயணன், செல்வகுமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.